**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S.63/2020**

**CNR.No.TNCB19000**

Date: 09.07.2025 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | இந்திராணி | **வயது** | 67 |
| **த/பெ** | ராஜசேகர் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | தோலம்பாளையம்புதூர் | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 9th July 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து என்னுடைய தாத்தா ரங்கைய கவுடர் பாட்டி சுப்பம்மாளுக்கும் கிரைய வகையில் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் கொடுத்திருக்கிறேன். தாவாசொத்தை கூட்டுக்குடும்ப சொத்து என்பதை காட்ட ஆவணத்தையும் வில்லங்க சான்றிதழையும் பிராதில் தாக்கல் செய்யவில்லை என்றும் அவ்வாறு இருந்திருந்தால் அந்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து ஆவணங்களாக குறியீடு செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்தின் அயிட்டம் எண். 1 முதல் 8 வரையில் உள்ள ஒரு பகுதியை எனது பாட்டி சுப்பம்மாள் கடந்த 24.09.1943 ம் தேதியன்று மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண்.2093/1943 -ன்படி காளைய கவுடர் மற்றும் அவரது வாரிசுகளிடம் கிரையம் பெற்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்தின் அயிட்டம் எண். 1 முதல் 8 வரையில் உள்ள ஒரு பகுதியை எனது தாத்தா ரங்கைய கவுடர் கடந்த 21.05.1951 ம் வருடம் திம்மண்ண கவுண்டர் மகன் ரங்கைய கவுடர் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அவர்கள் சொன்னார்கள். தாவா சொத்தின் அயிட்டம் எண். 1 முதல் 8 வரையில் உள்ள மற்றொரு பகுதியை எனது தாத்தா 04.08.1957 தேதியன்று

மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண். 1556/1957 என்ற பத்திரத்தை மாரண்ண கவுண்டர் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். கொஞ்ச கொஞ்சமாக எனது தாத்தா வாங்கியதாக சொன்னார்.

தாவா சொத்தின் அயிட்டம் எண். முதல் 13 வரையிலான சொத்துக்கள் வீடு மற்றும் காலியிடம் என்றால் ஊருக்குள் இருக்கிறது. தாவா சொத்தில் 9 முதல் 11 வரையில் உள்ள ஒரு பகுதி கடந்த 20.09.1950 ம் வருடம் மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண்.1277/1950 ன்படி பெட்டைய கவுடர் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகம் இல்லை. எனது தாத்தா ரங்கைய கவுடர் தான் கிரையம் பெற்ற சொத்தை பொறுத்து எதிர்காலத்தில் தனது வாரிசுகளிடையே எந்த பிரச்சினையும் வரக்கூடாது என்பதற்காக கடந்த 21.01.1966 ம் தேதியன்று மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண்.1/1966 ன் படி பதிவு செய்யப்பட்ட உயில் சாசனத்தை எழுதி வைத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

எனது தாத்தா பாட்டி ஆகியோர்களுக்கு சுப்பையன் மற்றும் எனது பெரியப்பா கணபதி கவுடர் ஆகிய இருவர் மட்டுமே ஆண் வாரிசுகள் என்றால் சரிதான். எனது தாத்தா பாட்டி இறந்த பிறகு தாவா சொத்தை சுப்பையன் மற்றும் எனது பெரியப்பா கணபதி கவுடர் ஆகியோர்கள் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். தற்போது தனித்தனியாக பிரித்துக் கொண்டார்கள். கடந்த 14.09.2005 ம் தேதி எனது தந்தை சுப்பையன் மற்றும் எனது பெரியப்பா கணபதி கவுடரின் வாரிசுகளும் மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண்.5414/2005 ன் படி பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

அந்த பாகப்பிரிவினை பத்திரம் எனது தரப்பில் வா.சா. ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். பாகப்பிரிவினைக்கு பிறகு எனது அப்பாவிற்கு வந்த சொத்தை எனது அப்பா அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு எனது அப்பா பாகப்பிரிவினையின் மூலம் கிடைத்த சொத்துக்களை தன்னுடைய ஆண் வாரிசான 1ம் பிரதிவாதிக்கு கடந்த 19.10.2015 ம் தேதியன்று மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண்.8773/2015 -ன்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்திருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

1ம் பிரதிவாதிக்கெதிராக மோசடியாக தானசெட்டில்மெண்ட் பத்திரம் செய்ததாக சட்டப்படியான நடவடிக்கை எடுத்தேனா என்றால் அதனால்தான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். 2015 ம் வருடம் 1ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் பற்றி தெரியும் என்றால் எனக்கு தெரியாது 2019 ம் வருடம்தான் எனக்கு தெரியும்.

எனது அப்பா இறந்ததற்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்த விபரம் தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிராதில் எனது தந்தை சுப்பைய கவுடர் எனக்காகவும் 1,2 பிரதிவாதிகளுக்காகவும் கர்த்தா என்ற முறையில் மேற்குறிப்பிட்ட பாகசாசனத்தில் கையொப்பம் செய்துள்ளார் என்று சொல்லியுள்ள சங்கதி வா.சா. ஆ 1 ஆவணத்தில் இல்லை என்றால் பொய்யான ஆவணத்தை எழுதி வைத்துள்ளார்.

பாகப்பிரிவினை பத்திரம் செல்லாது என விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டிருக்கிறேன். பாகப்பிரிவினை பத்திரத்தை செல்லாது என பரிகாரம் கேட்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தை சுப்பைய கவுடருக்கு வந்த சொத்தைதான் 1ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. ஒரு முறை சொத்தை பாகப்பிரிவினை செய்து விட்டால் அந்த சொத்தை எழுதி வைக்க அவருக்கு சட்டப்படி முழு உரிமை உண்டு என்றால் சரியல்ல. அது தவறு. எனது பெற்றோர் இறக்கும் வரை 1ம் பிரதிவாதியோடுதான் வாழ்ந்து வந்தார்கள் என்றால் கடைசிவரை நான்தான் பார்த்து வந்தேன்.

எனது பெற்றோர்கள் என் உடன் இல்லை என்றும் நான் திருமணம் ஆகி எனது கணவருடன் வ.உ.சி நகர் கோயமுத்தூரில் இருந்தேன் என்றால் எனது அப்பா அம்மா என்னுடன்தான் இருந்து வந்தார்கள். எனது அப்பா அம்மா என்னுடன்தான் இருந்து வந்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இருந்ததற்கான வருவாய் துறை ஆவணங்கள், மின்சார கட்டணம், குடிநீர்கட்டணம் சொத்து வரி ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் வீட்டு வரி செலுத்தியிருக்கிறேன். அதை தாக்கல் செய்திருக்கிறேன்.

நான் சொல்வது போல சுவாதீனத்திலும் இல்லை வருவாய் ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக தாக்கல் செய்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எப்போதும் எக்காலத்திலும் தாவா சொத்தில் குடியிருந்து வரவில்லை என்றால் சரியல்ல. நான் பூர்வீகத்தில்தான் இருக்கிறேன். தாவா சொத்தின் வருவாய் ஆவணங்கள் விட்டு வரி, மின் கட்டணம், குடிநீர் கட்டணம் ஆகிய ரசீதுகள் அனைத்தும் 1ம் பிரதிவாதியின் பெயரில்தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எனது அப்பாவும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து ஒரு பூமியை விற்றுதான் எனக்கும் 2ம் பிரதிவாதிக்கும் திருமணத்திற்கான சீர்வரிசைகள் செய்து வைத்தார்கள் என்றால் எதுவும் செய்யவில்லை. எனது தாத்தா ரங்கைய கவுடரும் பாட்டி சுப்பம்மாளும் எழுதி வைத்த உயில் சாசன சரத்துக்களின்படி தாவா சொத்தில் உரிமை கோர எனக்கு தகுதியில்லை என்றால் சரியல்ல.

உயிலில் கண்டுள்ள சரத்துக்களின்படி பரம்பரை பரம்பரையாக ஆண் வாரிசுகளுக்கு மட்டுமே சேரக்கூடியது என்றும் தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. உண்மையை மறைத்து பொய்யான தகவல்களை கூறி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை செய்யும்போது எனக்கு வயது 60 இருக்கும். அப்போது தனிக்குடித்தனமாகதான் இருந்து வந்தேன் என்றால் சரியல்ல. எனக்கு திருமணமானதிலிருந்தும் எனது பெற்றோர் வீட்டில்தான் இருந்தேன். நான் தனிக்குடித்தனமாக இருந்தேன் என்றும் வழக்கிற்காக என் பெற்றோருடன் இருந்தேன் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்திற்குண்டான போதிய நீதிமன்றக்கட்டணம் கட்டாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.07.09 19:50:14 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.